


# யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்

# அதிபர் அறிக்கை 2017

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
  1) சி.யதுசன்
  2) சி.பவித்திரன்
  3) இ.கஜீபன்
- வரவேற்பு நடனம்
- ஆசியுரை
  - "சைவாகமஜோதி" சிவஸ்ரீ சி.கிருஸ்ணசாமிக்குருக்கள்
- வரவேற்புரை
- தலைமையுரையும் அதிபர் அறிக்கையும்
  - அதிபர் - திருவாளர் க.காராளசிங்கம்
- கௌரவ விருந்தினர் உரை
  - திரு.சி.சிவகுமார் (பழைய மாணவன் - பொறியிலாளர் லண்டன்)
  - திரு.மு.தர்மபாலன் (பழைய மாணவன் - முன்னைநாள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சுவிஸ்)
- சிறப்பு விருந்தினர் உரை
  - திரு.த.மாதவன் (கோட்டக்கல்வி அலுவலர் - உடுவில்)
- பிரதம விருந்தினர் உரை
  - திரு.த.கணேசநாதன் (சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் - வடமாகாணம்)
- பரிசில் வழங்கல்
- மாணவர் கலை நிகழ்வுகள்
- நன்றியுரை
- திருவாளர்.சி.மதனமோகனராஜ் (ஆசிரியர்)
- பாடசாலைகீதம்

# யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்

## மகுடவாசகம்

"கற்றுக் கற்றாங் கொழுகு"

## பணிக்கூற்று

"பாடசாலைச் சமூகத்தினை ஒன்றிணைத்து பாடசாலைக்கல்வி அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாடசாலையை அபிவிருத்தி செய்தல்"

## தொலைநோக்கு

"மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடாக எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்து சமூகத்துடன் ஒத்திசைந்து வேலை உலகிற்கு தம்மை தயார்படுத்தும் வகையில் திறன்கள் தேர்ச்சிகளில் மேம்படைய உதவுதல்"

## பாடசாலை தொடர்பான அடிப்படை விபரம்

1) மாகாணம் :- வடக்கு, மாவட்டம் :- யாழ்ப்பாணம், வலயம் :- வலிகாமம்
2) கோட்டம் :- உடுவில்
3) உதவி அரசாங்கப் பிரிவு :- உடுவில்
4) பிரதேச சபை :- வலி தெற்கு உடுவில்
5) தேர்தல் தொகுதி :- மானிப்பாய்
6) கிராம சேவையாளர் பிரிவு :- J/211 குப்பிழான் வடக்கு
7) பாடசாலையின் பெயர் :- யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்
8) பாடசாலையின் முகவரி :- குப்பிழான் வடக்கு குப்பிழான்
9) பிரதேச செயலர் பிரிவு :- வலி தெற்கு உடுவில்
10) பாடசாலை நிறுவிய ஆண்டு :- 1925
11) பாடசாலை குறியீட்டு எண் :- 1010008
12) தொகை மதிப்பீட்டு இலக்கம் :- 09178
13) பரீட்சை இலக்கம் :- 11180
14) பாடசாலை வகை :- 2 - II
15) வகுப்புக்களின் பரம்பல் :- 1 - 11
16) பிரதான மொழி மூலம் :- தமிழ் மொழி
17) இட அமர்வு :- கிராமம்
18) தொலைபேசி இலக்கம்

அலுவலகம் :- 021 - 2059388 அதிபரது தொலைபேசி :- 077 - 0781854

19) மின்னஞ்சல் முகவரி :- kuppilanvigneswaramv@gmail.com

# அதிபர் அறிக்கை

குப்பிழான் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சொக்கவளவு சோதிவிநாயகப் பெருமானையும், கற்கரைகற்பக விநாயகப் பெருமானையும், கன்னிமார் கௌரி அம்பாளையும் மற்றும் இஷ்ட தெய்வங்களையும் வணங்கி இன்றைய இப்பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.த.கணேசநாதன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் திரு.த.மாதவன் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள லண்டன் நாட்டைச் சேர்ந்த எமது பாடசாலை பழைய மாணவனும், பொறியியலாளருமான திரு.சி.சிவகுமார் அவர்களே, மற்றும் சுவிஸ் நாட்டில் வசிக்கும் எமது பாடசாலை பழைய மாணவனும், முன்னைநாள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தருமான திரு.மு.தர்மபாலன் அவர்களே, இன்றைய விழா சிறப்புற நடைபெற ஆசியுரை வழங்கிய சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய பிரதம குரு "சைவாகமஜோதி" சிவஸ்ரீ கிருஸ்ணசாமிக்குருக்கள் அவர்களே, வலயக்கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களே, பாடசாலையின் முன்னைநாள் அதிபர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவர்களே, அயற்பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களே, உப அதிபர் அவர்களே, சக ஆசிரியர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, அன்பான மாணவச் செல்வங்களே உங்கள் அனைவரையும் வரவேற்று வணக்கத்தைக் கூறிக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் 2017ம் ஆண்டிற்கான இன்றைய பரிசளிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.த.கணேசநாதன் அவர்கள் இம் மண்ணின் மைந்தன் எனத் தன்னைச் சொல்லிக் கொள்வதில் மிக விருப்பமுடையவர். கிராமத்தில் உள்ள ஆலயங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புக்கள் எனத் தன்னால் ஆன உதவிகளைச் செய்துள்ளார். மேலும் எமது வடமாகாணத்தில் குற்றச் செயல்கள் எதுவும் நடைபெறாமல் இருப்பதற்காக அரும்பாடுபடுவதுடன் எமது பாடசாலையின் தேவைகளையும் அறிந்து அவற்றிற்காக தன்னாலான பங்களிப்பினை நல்குவார் என எதிர்பார்க்கின்றேன்.

அடுத்து சிறப்பு விருந்தினராக இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் திரு.த.மாதவன் அவர்கள் எமது கோட்டத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் தேவைகளை அறிந்து உடனுக்குடன் வழங்கலைப் பகிர்ந்து செயற்படும் ஓர் செயல்வீரன். அத்தோடு பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடையவராக காணப்படுகிறார்.

இந் நிகழ்வின் கௌரவ விருந்தினர்களாக வருகை தந்து இந்நிகழ்வை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற லண்டன் நாட்டைச் சேர்ந்த எமது பாடசாலை பழைய மாணவனும், பொறியியலாளருமான திரு.சி.சிவகுமார் அவர்கள் எம் மண்ணின் மைந்தன். மேலும் இப்பாடசாலையில் உபஅதிபராக

இருந்த அமரர் திரு.மா.சின்னத்துரை அவர்களின் புதல்வனாவார். இவர் லண்டன் விக்கினேஸ்வரா மன்றத்தின் உறுப்பினராக இருந்து செயற்படுகின்றார். இவர் இக்கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் நாடகம், விளையாட்டு என்பவற்றில் ஈடுபட்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்து தந்துள்ளார். அத்துடன் எமது பாடசாலையினுடைய முதல்வர் அறைக்கு வர்ணப்பூச்சும். நிலவிரிப்பும் செயற்படுத்தி தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள சுவிஸ் நாட்டில் வசிக்கும் எமது பாடசாலை பழைய மாணவனும், முன்னைநாள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தருமான திரு.மு.தர்மபாலன் அவர்கள் எம் மண்ணின் மைந்தன் ஸ்கந்தவரோதயா. வயாவிளான் பழைய மாணவனும் அத்துடன் பொது அமைப்புக்களுடன் இணைந்து செயறல்படுகின்ற தன்மை உள்ளவரும் இவரது பெற்றோர் இங்கு ஆசிரியராக இருந்து வேறு பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றியவர்கள். இவர் வருடா வருடம் தொடர்ந்து திரு.திருமதி.கனகம்மா.நமசிவாயம் ஞாபகார்த்தமாக பாடசாலைக்கு அனுசரனை வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் **எமது பாடசாலைகளின் அவசியத்தேவைகளை** இவர்கள் முன் சமர்ப்பிக்க எண்ணுகின்றேன் அந்த வகையில்

1. நூல்நிலையம்.
2. விஞ்ஞான ஆய்வுகூடம்.
3. கவர்ச்சிகரமான கற்றலை வழங்கக்கூடிய ஆரம்பக்கல்வி வகுப்பறை திருத்தம்.
4. சிறுவர்முற்றம் விஸ்தரிப்பு.
5. பிரதான மண்டபத்தின் மேல்மாடிக் கூரை போடும் வேலைத்திட்டம்.
6. அதிபர் அலுவலகம் புதிதாக அமைத்தல்.
7. ஆசிரியர் ஓய்வறை புதிதாக அமைத்தல்.
8. மலசலகூட வேலை வலயக்கல்வி அலுவலகத்தினால் ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அதற்கான நிதியானது வேலை பூரணமாக்கப்பட்டதன் பின்னரே கிடைக்கும் தற்பொழுது நிதி வளம் இல்லை என்பதனால் இதற்கான நிதியினை வெளிநாட்டு மன்றத்தினரிடமிருந்தோ. உள்நாட்டு வசதி படைத்தோரிடமிருந்தோ திருப்பி செலுத்தப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரில் இந் நிதியினைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்நிகழ்விலே ஆசியுரை வழங்கிய எமது வணக்கத்துக்குரிய குருக்கள் "சைவாகமஜோதி" சிவஸ்ரீ கிருஸ்ணசாமிக்குருக்கள் எமது பாடசாலையின் அனைத்து சமய நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிப்பவர். எமது பாடசாலைகளில் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் விழாக்களில் அவர் கலந்து கொண்டு தனது ஆசிகளை எமக்கு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

## மாணவர் எண்ணிக்கை

மாணவர்களின் எண்ணிக்கையானது மிக குறைந்து கொண்டே செல்கின்றது. இடம்பெயர்வுகளுக்கு முன்னர் சுமார் 800 மாணவர்கள் வரையில் கல்வி கற்ற இப்பாடசாலையில் சென்ற வருடம் 157 மாணவர்களுடன் இயங்கியது. இன்று 120 மாணவர்களை மட்டும் கொண்டு இயங்குகின்றது. இதற்கான காரணத்தை நோக்கும் போது பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகரப் பாடசாலைகளிலும், அண்மையிலுள்ள பெரும் பாடசாலைகளிலும் சேர்ப்பதனால் இந்நிலை ஏற்படுகின்றது. அத்தோடு வலிவடக்குப் பகுதிகளிலுள்ள பலாலி, தையிட்டி, மயிலிட்டி ஆகிய பிரதேசங்கள் மீள குடியமர்ந்த காரணத்தினால் இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று அருகிலுள்ள பாடசாலைகளில் இணைந்து கல்வியைத் தொடருகின்றனர். இதன் காரணத்தினால் திடீரென 30 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் குறைவடைந்து உள்ளனர். எனவே நிறைவான வளங்கள் உள்ள இப்பாடசாலையில் மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்கு இக்கிராமத்திலுள்ள பெற்றோர்கள், பெரியோர்கள், கல்விமான்கள் தங்களுடைய பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளை சகோதரத்தினை இங்கு கல்வி கற்பதற்கான வழிமுறைகளைக் கையாண்டு ஒரு சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவர் தொகையை அதிகரிக்கச் செய்யாவிடின் இரண்டு மூன்று வருடங்களுக்குப் பின் பாடசாலை இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்படும் இதனை கவனத்தில் கொண்டு இந்த சமூகமானது முதற் கட்டமாக ஆரம்பபிரிவு மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் நோக்கத்தோடு செயற்படவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நான் அதிபர் பொறுப்பை ஏற்ற சில மாதங்களின் பின் எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் தரம் 01 இற்கான மாணவர்களை அதிகரிக்கும் நோக்கத்தோடு இப் பாடசாலையில் முன்பள்ளியை ஆரம்பித்தேன். அப்போது 38 மாணவர்கள் முன்பள்ளியில் கல்வி கற்றனர். அந்நோக்கமானது படித்த கல்விமான்களாலும், கல்வியில் அக்கறையுடைய பெற்றோர்களினாலும், சமுதாயத்திலுள்ள பெரிய மனிதர்களினாலும் இம் முன்பள்ளி மூடுவதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. இது எம்மைப் பொறுத்தவரை வேதனையையும், மனவருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆசிரியர் எண்ணிக்கை

தற்போது இப்பாடசாலையில் 14 நிரந்தர ஆசிரியர்களும், 3 பகுதி நேர ஆசிரியர்களும், தற்காலிக இணைப்பில் ஒரு ஆசிரியரும், அதிபர் உட்பட 19 பேர் பணியில் உள்ளனர். எமது பாடசாலை ஒரு நிறைவான ஆசிரியர் குழாத்தைக் கொண்டு சிறப்பான தமது கற்பித்தல் சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. செல்வி.ஷியானி.கணேசலிங்கம் முகாமைத்துவத்திற்கு உதவியாகவும், ஆரம்பப்பிரிவுக்கு ஆங்கிலப் பாடத்தை கற்பிப்பவருமாக செயற்பட்டு வருகிறார். எனவே இவருக்கு கனடா விக்கினேஸ்வரா மன்றத்தினர் சிறு நிதியினை வழங்கி வருகிறார்கள். வளமான ஆசிரியர் வளம் இருப்பதால் மீத்திறனுள்ள மாணவர்கள் வெளிப்பாடசாலைக்கு

சென்றாலும் கூட இப்பாடசாலைக்கு நம்பி வரும் மாணவர்களை வழிப்படுத்தி புலமைப்பரீட்சையிலும், க.பொ.த(சா/த) பரீட்சையிலும் 100% பெறுபேற்றினை சென்ற வருடம் காட்டியது பெருமைக்குரிய விடயமாகும்.

**ஆசிரியர் கழகம்**

ஆசிரியர்களின் நலன்களுக்காகச் செயற்படும் இக் கழகமானது ஆசிரியர்களின் குடும்ப வைபவங்களிலும் , துக்க நிகழ்வுகளிலும் பங்கு பற்றி வருகின்றது. ஆசிரியர்களின் பிரியாவிடை நிகழ்வுகளையும் நடாத்தி வருகின்றது. கழகத்தின் செயலாளர் திருமதி.ற.நிசாந்தனும் , கழகத் தலைவராக திரு.க.ஆதவனும் , பொருளாளராக திருமதி.ரா.இறகுலனும் செயற்பட்டு வருகின்றார்கள்.

**இடமாற்றம் பெற்றுச் சென்றோர்**

திருமதி.ஜெ.குமாரகிருஸ்ணன் 17.09.2017 இலிருந்து யா/இராமநாதன் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவர் இப்பாடசாலையின் வளர்ச்சியில் முக்கியமான பங்கினை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர் பாடசாலைக்கு நேர காலத்துடன் வந்து தனது குறிக்கப்பட்ட பொறுப்புக்கள் அனைத்தையும் சிறப்பாகவும் , திறமையாகவும் செய்துகாட்டியவர் ஆவார். இவர் ஒழுக்காற்றுக்குழு, சுற்றாடல்குழு, விளையாட்டுக்குழு, உணவு போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருந்து குறிப்பாக வருடந்தோறும் நடைபெறும் இல்லமெய்வல்லுநர் போட்டி, கோட்டமட்டப் போட்டி, வலயமட்டப் போட்டி, உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை பயிற்றுவித்து வெற்றிகளையும் ஈட்டித்தந்த ஒருவராவர். இவர் யா/இராமநாதன் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவரின் பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**புதிதாக இணைக்கப்பட்டோர்**

திரு.கி.ஜெகதீசன் ஆசிரியர் அவர்கள் யா/புங்குடுதீவு கமலாம்பிகை மகா வித்தியாலயத்திலிருந்து 04.01.2017 அன்று எமது பாடசாலையில் குடியுரிமைக்கல்வி கற்பிப்பதற்காக இணைந்து கொண்டுள்ளார். உடற்கல்வி ஆசிரியராக திரு.ச.நிசாந்தன் கிழமையில் இரு நாட்களுக்கு யா/ஏழாலை சைவ மகாஜனாவில் இருந்து வருகை தந்துள்ளார்.

**ஒழுக்காற்றுக்குழு**

யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான ஒழுக்காற்றுக்குழுவில்

- திரு.க.காராளசிங்கம் (அதிபர்)
- திரு.சி.மதனமோகனராஜ்
- திருமதி.ரா.இறகுலன்
- திரு.க.ஆதவன்
- திருமதி.செ.விக்கினேஸ்வரன்
- திருமதி.ஜெ.குமாரகிருஸ்ணன்

என்போர் அங்கம் வகிக்கின்ற அதே நேரம் தேவையான சந்தர்ப்பங்களில் இக்குழுவினர் கூடி மாணவர்களது வரவு, மாணவர்களது சீருடை, மாணவர்களது நன்னடத்தை போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி பெற்றோருடனான சந்திப்புக்களும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு அவை ஆவணப்படுத்தப்பட்டும் வருகின்றன.

## மாணவத் தலைவர்கள்

2017ம் ஆண்டிற்கான மாணவர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு சின்னம் சூட்டல் நிகழ்வுகள் நடைபெற்றது. மாணவர்கள் தமது பணியை சிறப்பாகச் செய்து வருகின்றனர். சிரேஷ்ட மாணவ தலைவனாக செ.சாந்தரூபன் , சிரேஷ்ட மாணவ தலைவியாக செ.சனூசியா ஆகிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உப சிரேஷ்ட மாணவர் தலைவராக சா.நிதர்சன் , உப சிரேஷ்ட மாணவ தலைவியாக க.யனோசிகாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பொறுப்பாசிரியராக திருமதி.ரா.இறகுலன் செயற்பட்டு வருகின்றார்.

## பாடசாலைச்சுத்தமும் காலை ஆராதனையும்

எமது கல்லூரியில் மாணவர்கள் தங்கள் நாளாந்தக் கடமைகளை வகுப்பறையின் கவின் நிலை பேணல் , சுற்றுச்சூழல் சுத்தம் ஆகியவற்றில் தரரீதியாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. காலை ஆராதனையின் போது மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணரும் வகையில் நற்சிந்தனை ஒழுங்குகள் புதன் கிழமைகளில் தர ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் புதன்கிழமைகளில் நற்சிந்தனைகளை வழங்கி வருகிறார்கள் இதற்கான ஒழுங்குகளை ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

## கல்விச் செயற்பாடு

சென்ற வருடம் முதலாம் தவணைப்பரீட்சைப் புள்ளிகளை நோக்கிய போது பெரும்பாலான மாணவர்களின் புள்ளிகள் வீழ்ச்சியைக் காட்டியது. இதற்கான காரணத்தை ஆராய்ந்த போது எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் மிகக் கூடுதலனாவராகக் காணப்பட்டனர். 90% ஆன மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். எனவே இரண்டாம் தவணை தொடக்கத்தில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களை இனங்கண்டு அவர்களை ஒவ்வொரு வகுதிகளாக வகுத்து அவ்வகுதிகளுக்கு ஒவ்வொரு ஆசிரியரை நியமித்து எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் ஏற்ற திட்டத்தை மேற்கொண்டோம். ஒவ்வொரு மாத முடிவிலும் அதற்கென ஒரு பரீட்சை நடாத்தி அதில் 80 இற்கு மேல், 60 இற்கு மேல், 40 இற்கு மேல், 40 இற்கு உட்பட்டவர்கள் என நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுக்களுக்கும் ஆசிரியர்களைப் பொறுப்பாக வைத்து மாதாந்தம் மொத்தமாக ஐந்து பரீட்சைகள் நடாத்தப்பட்டது. இந்த செயற்றிட்டத்தின் மூலம் 85-90% ஆன மாணவர்கள் எழுத வாசிக்கக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். தற்போது 1 - 10% மாணவர்களுக்கு இத்திட்டத்தினை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். இத்திட்டமானது எமக்கு 100% வெற்றியினை அளிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் கூடுதலாக நாளாந்த கூலி வேலைக்குச் செல்பவராகவும், வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்டவராகவும் காணப்படுவதால் பிள்ளைகளினுடைய கல்விச் செயற்பாட்டில் அக்கறையின்மை உடையவராகக் காணப்படுகிறார்கள். இதனால் மாணவர்கள் வீதிகளிலும், மதவுகளிலும் தமது சகபாடிகளுடன் திரிவதனை அவதானிக்க கூடியதாக இருந்தது. இதனை தவிர்ப்பதற்காக மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலையில் இரவு நேர வகுப்பை நடாத்துவதற்கு திட்டமிட்டோம். இதற்காக கிராமத்திலுள்ள புலம்பெயர் மக்களுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் அதற்கு ஆதரவாகவும் தாங்கள் அதனைப் பொறுப்பேற்று நடாத்துவதாகவும் கூறினார்கள். இதற்காக மாதாந்தம் வளவாளர்களுக்காக பத்தாயிரம் ரூபாவை வழங்க இங்கிலாந்து பழைய மாணவர் சங்கம் முன்வந்தது. இச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு வலிகாம கல்வி வலயத்தின் அனுமதியைப் பெற்று இவ்வகுப்புக்களை நடாத்துவதற்கு இரு வளவாளர்களையும் நியமித்து அதற்கு பொறுப்பாக எமது பாடசாலை ஆசிரியரும், இவ் ஊரைச் சேர்ந்தவருமான திரு.சி.மதனமோகனராஜ் அவர்களை நியமித்து அதிபரின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் பெரும் மாற்றத்தை காணக் கூடியதாக உள்ளது.

சென்ற வருடம் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு தன்னிச்சையாக இரவு நேரத்தில் இச்செயற்பாட்டை செய்ததன் விளைவாக சென்ற வருடம் க.பொ.த (சா/த) பரீட்சையில் சகல மாணவர்களும் க.பொ.த (உ/த) கற்பதற்கு வழி ஏற்பட்டது. அது மட்டுமல்ல 100% பெறுபேற்றையும் பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் முதன்மை நிலை பெற்று சாதனை படைத்தது. பாட ரீதியாக நோக்குகின்ற போது கணிதம், விஞ்ஞானம் 83% ஆகவும் மற்றைய பாடங்கள் 100% பெறுபேற்றை எடுத்துக் காட்டியமை பெருமைக்குரிய விடயமாகும். அத்தோடு புலமைப்பரிசில்பரீட்சையில் சகல மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100% பெறுபேற்றை வலிகாமம் கல்வி வலயத்தில் காட்டியது.

இவ் இரவு நேர வகுப்பையும், கற்றலில் இடர்படும் மாணவர்களுக்கான மொழித்திறன் வகுப்பையும், அதற்குரிய பதிவுகள், பரீட்சை முறைகள் போன்றவற்றையும் எமது பாடசாலைக்கு வருகை தந்த சிவன் அறக்கட்டளை நிலையத்தினர் இத்திட்ட நடைமுறையை பார்வையுற்ற குழுவினர் மாணவர்களுக்கு வேண்டிய சத்துணவை வழங்குவதற்காக மாதாந்தம் ரூபா 30,000 வழங்குவதாக கூறினார்கள். இதற்கு அவர்கள் இன்று வரை அனுசரணை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வருடம் கல்வி கற்கும் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கும், தரம் 10 மாணவர்களுக்கும், புலமைப்பரிசில் பரீட்சை தோற்றும் மாணவர்களுக்கும் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வகுப்புக்களை நடாத்துவதற்கு குப்பிழான் விக்கினேஸ்வரா கலைவாணி நாடக மன்றத்தினர் அனுசரணை வழங்கி வருகின்றனர். அவர்களின் நிதிப்பங்களிப்புடன் தரம் 10,11 மாணவர்களுக்கான கணித வகுப்புக்களும் தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்பரீட்சை வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு பகுப்பாய்வு

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் எண்ணிக்கை | 05 | 15 | 18 | 18 | 18 | 08 | 17 | 09 | 06 | 07 |
| சித்தியடைந்தோர் சதவீதம் | 100% | 73% | 61% | 55% | 16% | 37.5% | 52.9% | 55% | 100% | 48% |
| 70 இற்கு மேல் புள்ளி பெற்ற எண்ணிக்கை | 05 | 11 | 11 | 10 | 03 | 03 | 09 | 05 | 06 | 03 |

## க.பொ.த (சா/த) பரீட்சை பகுப்பாய்வு

### மொழி மூலம் :- தமிழ்

| பாடங்கள் | சித்தியடைந்த வீதம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| சைவசமயம் | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 87.5% | 100% | 100% |
| தமிழ் | 100% | 38% | 83.3% | 72.2% | 41.6% | 81% | 62.5% | 72.7% | 100% |
| ஆங்கிலம் | 0% | 0% | 8.3% | 0% | 0% | 9% | 0% | 0% | 0% |
| வரலாறு | 66.6% | 39% | 83.3% | 22.2% | 25% | 45.5% | 62.5% | 72.7% | 100% |
| விஞ்ஞானம் | 41.6% | 15.3% | 40% | 11.1% | 33.3% | 36.4% | 0% | 36.3% | 83% |
| கணிதம் | 41.6% | 23% | 50% | 16.6% | 8.3% | 36.4% | 25% | 27.2% | 83% |
| புவியியல் | 75% | 64% | 64% | - | 50% | 0% | - | - | - |
| குடியுரிமைக்கல்வி | - | - | 100% | 72.2% | 58.3% | 100% | 75% | 63.6% | 100% |
| சங்கீதம் | 100% | 60% | 100% | 83% | 100% | 87.5% | - | 80% | 100% |
| சித்திரம் | - | - | 67% | 100% | 75% | 66.6% | 60% | 50% | 100% |
| நடனம் | - | - | - | - | - | - | 100% | - | 100% |
| விவசாயமும் உணவுத் தொழினுட்பமும் | 85.7% | 23.5% | 100% | 94.4% | 41.6% | 63.6% | 62.5% | 100% | 100% |
| மனைப் பொருளியல் | 80% | 75% | 50% | - | - | - | - | - | - |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | - | 100% | 88% | - | - | - | - | 100% | 100% |
| முயற்சியாண்மை | - | 100% | - | - | - | - | - | - | - |
| நாடகமும் அரங்கியலும் | - | 100% | - | - | - | - | - | - | - |
| க.பொ.த(உ/த) தகுதி பெற்றோர் | 05 | 05 | 04 | 03 | 01 | 04 | 02 | 03 | 06 |

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

2016ம் ஆண்டிற்குரிய இல்ல விளையாட்டுப் போட்டிகள் குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆரம்பப்பிரிவு மாணவர்கள் சித்திரப்போட்டி, துரிதகணிதம், பொது அறிவு, செயற்பட்டு மகிழ்வோம் எனும் குடும்பமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றிருந்தனர். தெரிவான மாணவர்கள் கோட்டமட்டப் போட்டியில் துரிதகணிதத்தில் ம.விஷாந்தனா 2ம் இடத்தையும், சித்திரப்போட்டியில் பா.கதீசன் 3ம் இடத்தையும், வலயமட்டச் சித்திரப்போட்டியில் பா.கதீசன் 3ம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இடைநிலைப்பிரிவு மாணவர்கள் தமிழ்த்தினப்போட்டி, சைவசமயப்போட்டி, கோலப்போட்டி, சமூக விஞ்ஞானப்போட்டி, விளையாட்டுப்போட்டி என்பவற்றில் பங்குபற்றி வெற்றி பெற்றிருந்தனர். விளையாட்டுப்போட்டியில் உயரம்பாய்தலில் கோட்ட மட்டத்தில் ஞா.லக்சிகா 2ம் இடத்தினையும், சா.சசீபன் 1ம் இடத்தினையும், கி.ஜெனிபன் 2ம் இடத்தினையும் 200M இல் ப.யலக்சன் 2ம் இடத்தினையும், பாவோதல் போட்டியில் யோ.சங்கீதா கோட்டமட்டத்தில் 3ம் இடமும். பேச்சுப் போட்டியில் ஞா.லக்சிகா கோட்டமட்டத்தில் 2ம் இடமும், கதாப்பிரசங்கப் போட்டியில் த.யாழினி கோட்டமட்டத்தில் 1ம் இடமும், வலயமட்டத்தில் 3ம் இடமும், வில்லுப்பாட்டு குழு நிகழ்ச்சியில் கோட்டமட்டத்தில் எமது மாணவர்கள் 3ம் இடத்தினையும். புராணபடணத்தில் க.யனோசிகா சா.சசீபா ஆகியோர் கோட்டமட்டத்தில் 3ம் இடத்தையும். கோலப்போட்டியில் யோ.ஜெனனி கோட்டமட்டத்தில் 2ம் இடத்தினையும். சமூக விஞ்ஞானப்போட்டியில் சு.நிக்சன்றொபேட் வலயமட்டத்தில் 1ம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2016 ஆண்டுச் செயற்பாடுகளில் மாணவர்கள் திறம்படச் செயற்பட வழிநடாத்திய ஆசிரியர்களை வாழ்த்துகின்றேன்.

## மன்றச் செயற்பாடுகள்

### ஆரம்பக் கல்வி மன்றம்

மேற்படி மன்றமானது ஆரம்பக்கல்வி மாணவர்களின் செயற்பாடுகளை விருத்தி செய்யும் முகமாக நடாத்தப்படுகிறது. இம் மன்றத்தின் தலைவராக செல்வி.இ.தமிழினி. செயலாளராக செல்வி.ஜெ.யாழினி. பொருளாளராக செல்வன்.த.கவிவாணன் ஆகியோரை அங்கத்தவராகக் கொண்டு பொறுப்பாசிரியராக திருமதி.உ.செல்வரத்தினம் அவர்களுடன் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களான திருமதி.ச.கிருஸ்ணகுமார், திருமதி.ப.சிறிகுமாரன், திருமதி.கி.தேவமோகன். திருமதி.சி.மணிவண்ணன் ஆகியோரின் உதவியுடன் இம் மன்றம் சிறப்பாக வழிநடாத்தப்பட்டு வருகின்றது. மாதத்தில் இரு தடவைகள் ஆரம்பபிரிவு மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இம் மன்றமும் சிறப்பாக செயற்பட மனமார வாழ்த்துகிறேன்.

## இந்துமாமன்றம்

சைவப் பண்பாட்டையும், சமய விழுமியங்களையும் கொண்ட ஆளுமை மிக்க சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இம் மன்றம் இயங்கி வருகின்றது. எமது பாடசாலைக்கு அருகே இணைந்ததாக சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயம் அமைந்துள்ளதால் வெள்ளிக்கிழமைகளில் காலைப்பிரார்த்தனை வழிபாட்டிற்கு ஆலயத்திற்குச் சென்று சிவபுராணம் ஓதுவது வழமையான ஒன்றாகும். அத்துடன் ஆலயத்தில் நடைபெறும் விஜயதசமி உற்சவத்தை பாடசாலை பொறுப்பேற்று செய்து வருகின்றது. மேலும் சமயகுரவர்களின் குருபூசை, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு. மாதந்தோறும் மன்றச் செயற்பாடுகள், சைவபரிபாலனசபையால் நடாத்தப்படும் பரீட்சைகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி வருகிறது. நவராத்திரி விழாவின் செயற்பாடுகளில் சரம் கட்டுதல், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், பேச்சுப்போட்டி ஆகியன இடம்பெற்று வாணிவிழாவில் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி.செ.விக்கினேஸ்வரனும், திருமதி.சி.மணிவண்ணன் ஆசிரியர்கள் அவர்களும் உள்ளனர். மன்றத் தலைவராக செல்வி.செ.சனூசியாவும், செயலாளராக செல்வி.த.பஜானாவும், உபதலைவராக செல்வி.சா.சசீபாவும், பொருளாளராக செல்வி.க.யனோசிகாவும், உப செயலாளராக செல்வன்.செ.சாந்தரூபனும் செயற்பட்டு வருகின்றனர். இம் மன்ற செயற்பாடுகள் மேலும் சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ் மன்றம்

யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய தமிழ்மன்ற அங்கத்தவர் தெரிவுக் கூட்டமானது 07.02.2017 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மன்றத்தின் தலைவராக க.கிசாந் என்பவரும், செயலாளராக செல்வி.த.தமிழினி என்பவரும், பொருளாளராக ஜீ.டினேசன் என்பவரும், உபதலைவராக யோ.றஜீவன் என்பவரும் தெரிவு செய்யப்பட்டார்கள். வகுப்பு ரீதியான அங்கத்தவர்களாக தரம் 06 இல் சி.யதுசனும், தரம் 07 இல் ஜெ.சதுர்சனும், தரம் 08 இல் சு.சுனோஜனும், தரம் 09 இல் சி.பவித்திரனும், தரம் 10 இல் உ.அகிலனும், தரம் 11 இல் செ.சாந்தரூபனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இம் மன்றத்தின் செயற்பாடுகளாக செவ்வாய்க்கிழமைகளின் இறுதிப்பாடவேளையில் ஏனைய மன்றங்களின் வரிசையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இச் செயற்பாடுகளின் மூலம் மாணவரது மொழித்திறன் விருத்தி, பேச்சுத்திறன் விருத்தி, வாசிப்புத்திறன் விருத்தி, தலைமை ஏற்கும் பண்பு விருத்தி, குழுச் செயற்பாட்டில் ஈடுபடும் திறன் என்பவற்றிற்குக் களம் அமைத்துக் கொடுக்கும் செயற்பாடாக இம்மன்றம் காணப்படுகிறது. இம் மன்றமும் சிறப்புடன் செயற்பட வாழ்த்துகின்றேன்.

## சுகாதார மன்றம்

இம் மன்றமானது மாணவர்களின் சுகாதார மேம்பாட்டினை கவனம் செலுத்தும் முகமாக செயற்பட்டு வருகின்றது. மாணவர்களின் உடற்திணிவுச் சுட்டெண் தவணை தோறும் சோதிக்கப்படுவதுடன் தரம் 01.04.07.10 ஆகிய மாணவர்களின் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் கண்பரிசோதனை, பற்பரிசோதனை ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் வாரந்தோறும் போலிக்கமிலம். அயன், உயிர்ச்சத்துC ஆகியனவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இம் மன்றச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக திருமதி.ஜெ.குமாரகிருஸ்ணன் செயற்பட்டு வந்தவர். இவர் இடமாற்றம் சென்றவுடன் திரு.ச.நிசாந்தன் ஆசிரியர் தற்பொழுது செயற்பட்டு வருகின்றார். இம் மன்றமும் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

## ஆங்கில மன்றம்

எமது பாடசாலையில் ஆங்கில மன்றமானது பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வகையில் தலைவராக செல்வி.க.யனோசிகாவும், செயலாளராக செல்வி.சா.சசீபாவும், பொருளாளராக செல்வன்.செ.சாந்தரூபனும், உபதலைவராக செல்வி.செ.சனூசியாவும் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் கீழ் இம் மன்றமானது இயங்கி வருகின்றது. இம் மன்றம் தனது நடவடிக்கைகளை மிகச் சிறப்பாக மேற் கொண்டு வருகின்றது. இதன் மூலம் மாணவரின் ஆங்கில மொழித்திறனை விருத்தி செய்ய வழிவகுக்கின்றது. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி.து.பகீதரன், செல்வி.க.ஷியானி அவர்கள் செயற்பட்டு வருகிறார்கள் இம்மன்றமும் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

## சமூக விஞ்ஞான மன்றம்

எமது பாடசாலையின் சமூக விஞ்ஞான மன்றமானது மாணவர்களின் பரந்து பட்ட உலக சமூக விடயங்களை பிரதிபலிக்கும் வகையிலும் மாணவர்கள் மத்தியில் அறிவியல் விடயங்களை உள்வாங்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2017ம் ஆண்டு இவ் மன்றமானது தவணைக்கு இரு தடவை செயற்பட்டு வருகின்றது. தலைவராக செல்வன்.செ.சாந்தரூபன் செயலாளராக செல்வி.க.யனோசிகா உப தலைவராக செல்வி.த.தமிழினி பொருளாளராக செல்வன்.க.கிசாந் ஆகியோரும் இம் மன்ற பொறுப்பாசிரியர்களாக திரு.கி.ஜெகதீசன், திருமதி.சு.மதியழகன் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். அத்தோடு சமூக விஞ்ஞானப் போட்டியில் சு.நிக்சன் றொபேட் எனும் மாணவனுக்கு வலய மட்டத்தில் முதலாம் இடம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இம் மன்றம் தொடர்ந்து திறம்படச் செயற்பட வாழ்த்துகிறேன்.

## கணித விஞ்ஞான மன்றம்

இம் மன்றம் மாணவர்களின் கணித விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் இயங்கி வருகின்றது. அத்துடன் செயன்முறை

ரீதியாகவும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது. அது மட்டுமன்றி அனைத்து போட்டிகளிலும் மாணவர்களை பங்குபெறச் செய்து ஊக்குவித்து வருகின்றது. கடந்தகாலங்களை விட இவ்வருட க.பொ.த (சா/த) பெறுபேறு மிக உயர்வடைந்து காணப்படுகின்றது இம் மன்றப் பொறுப்பாசிரியர்களாக திருமதி.ரா.இறகுலன், திரு.க.ஆதவன் ஆகியோர் செயற்பட்டு வருகிறார்கள் மன்றத் தலைவராக செல்வன்.யோ.றஜீவன், செயலாளராக செல்வி.க.யனோசிகா, பொருளாளராக செல்வி.ஈ.கீர்த்தனா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இம் மன்றமும் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

## கிறிஸ்தவ மன்றம்

கிறிஸ்தவ மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் இம்மன்றம் செயற்படுகின்றது. இம் மன்றம் ஒளிவிழாக்கலை நிகழ்வுகளை சிறப்பாக வருடந்தோறும் நடாத்தி வருகின்றது. இம் மன்றத்திற்கு பொறுப்பாசிரியராக திருமதி.ஞா.அலெக்ஸ்பெனடிக்ற் அவர்கள் செயற்பட்டு வருகிறார். இம் மன்றமும் சிறப்பாக இயங்க எனது வாழ்த்துக்கள்.

## விவசாய மன்றம்

இம் மன்றம் மாணவர்களின் விவசாய அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இயங்கி வருகின்றது இம் மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திரு.க.நவரத்தினம், திரு.க.ஆதவன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றார். இம் மன்றத்தின் தலைவராக செல்வன்.உ.அகிலன், செயலாளராக செல்வன்.ந.மயூரன். பொருளாளராக செல்வி.ற.அபிஷேக்கா ஆகியோர் செயற்பட்டு வருகிறார்கள். இம் மன்றம் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

## அழகியல் மன்றம்

இம்மன்றம் இயல்இசை, சித்திரம் , நடனம் ஆகிய துறைகளை விருத்தி செய்யும் முகமாக செயற்படுகின்றது. இம் மன்றத்தின் தலைவராக செல்வி.சா.சசீபா, செயலாளராக செல்வி.செ.சனூசியா, பொருளாளராக செல்வன்.செ.சாந்தரூபன் , அவர்களும் பொறுப்பாக இருந்து மன்றத்தை நடத்துகின்றனர். வருடாவருடம் நடாத்தப்படும் அனைத்து விதமான போட்டிகளிலும் மாணவர்களை பங்குபெறச் செய்வது இம் மன்றத்தின் செயற்பாடுகள் ஆகும். இம் மன்றத்திற்குப் பொறுப்பாசிரியர்களாக திருமதி.ற.நிசாந்தன், செல்வி.ரா.கந்தையா, திருமதி.ஞா.அலெக்ஸ்பெனடிக்ற் ஆகியோர் செயற்படுகின்றனர். இம்மன்றமும் திறம்பட செயற்பட வாழ்த்துகின்றேன்.

## மாணவர் பாராளுமன்றம்

எமது பாடசாலையில் மாணவர்களின் தலைமைத்துவப் பண்பையும், ஆளுமையையும் வளர்க்கும் நோக்கில் மாணவர் பாராளுமன்றம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டு காலைப்பிரார்த்தனையைத் தொடர்ந்து மாணவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். 22.02.2017 அன்று மாலை 12.30 மணிக்கு மாணவர் பாராளுமன்ற தேர்தல் சகல ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்று அன்று மாலையே வாக்குகளும் எண்ணப்பட்டன. இதன்படி பிரதமர் :- செல்வன்.யோ.ரஜீவன், சபாநாயகர் :- செல்வன்.உ.அகிலன் அத்துடன் 10 அமைச்சு தலைவர்களும் தெரிவு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்தலும் நடைபெற்றது. அவர்களுக்கு அமைச்சு பொறுப்புக்களும் வழங்கப்பட்டன. இம் மன்றப் பொறுப்பாசிரியர்களாக திரு.கி.ஜெகதீசன், திருமதி.சு.மதியழகன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இம் மன்றம் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

## பாடசாலையின் ஏனைய செயற்பாடுகள்

### விசேட கல்வி

இப்பாடசாலையில் தற்போது கற்கின்ற மாணவர்கள் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். பெற்றோரின் முழுமையான கண்காணிப்புக்கள் சில மாணவர்களுக்கு இன்மையால் உடற்சோர்வு, புத்திக்குறைவு, பார்வைக்குறைபாடு, கண்கூச்சம் . மெதுவான உள வளர்ச்சி, பல்லினக்குறைபாடுகள் போன்றவற்றால் பாதிப்புற்றவர்கள் உள்ளனர். இவர்களில் சிலர் இனங்காணப்பட்டு வைத்தியரின் ஆலோசனைக்கு உட்படுத்தப்பட்டு மூக்கு கண்ணாடிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவர்களுக்கு உரிய விசேட கல்வி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. அத்துடன் விசேட கல்வி ஆசிரியராக திருமதி.நி.விபுலானந்தன் செயற்பட்டு வருகின்றார். இவ் அலகு தொடர்ந்து மேலும் செயற்பட வாழ்த்துகிறேன்.

### கட்டாயக்கல்விக்குழு

"கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமை" என்ற கோட்பாட்டிற்கிணங்க இக்குழு தனது பணியினை ஆற்றி வருகின்றது. மாதந்தம் மாணவர்களின் வரவு ஒழுங்கினைக் கண்காணித்து கல்லூரிக்கு சமூகமளிக்காத மாணவர்களை இனங்கண்டு ஒழுங்கான வரவைப் பேணி வருகின்றது. இதனை வகுப்பாசிரியர்கள் யாவரும் மேற் கொண்டு வருகின்றார்கள்.

### வழிகாட்டல் ஆலோசனை

எமது பாடசாலைக்கு வழிகாட்டல் ஆலோசனைக்கு அதற்கென பயிற்றுவிக்கப்பட்ட ஒரு ஆசிரியர் இல்லாத நிலையிலும் செல்வி.ராகினி.கந்தையா அவர்கள் பொறுப்பாக இருந்து சிறந்த முறையில் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றார்.

### மதிய உணவு

பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் உலக உணவுத் திட்டத்திற்கமைவாக எமது பாடசாலையிலும் உணவு வழங்கப்படுகிறது. இதற்குப் பொறுப்பாசிரியர்களாக திருமதி.நிதர்சினி.விபுலானந்தன் . செல்வி.ராகினி.கந்தையா ஆகிய இருவரும் இதனை சிறப்பாக ஆற்றி வருகின்றனர்.

## 2017ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் குழாம்



## 2017ஆம் ஆண்டிற்கான
## கல்வி சாரா ஊழியர்கள்



## 2016 இல் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள்



## 2016 இல் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில்விருந்தினர் சான்றிதழ் வழங்குதல்



## தரம் ஒன்றிற்கான கால்கோள் விழா



## தரம் மூன்றிற்கான செயற்பாட்டு மகிழ்வோம்



## 2016 இல் நடைபெற்ற எமது பாடசாலை பரிசளிப்புவிழா நிழற்படம்



## 2017 ஆம் ஆண்டிற்கான மாணவர் தலைவர்கள்



## கணினிப்பிரிவு

கணினிக்கூடம் 20x20 அளவுள்ள வகுப்பறையொன்றில் தனியாக அமைக்கப்பட்டு 10 கணினிகளுடன் செயற்படுத்தப்படுகின்றது. ஆரம்பப்பிரிவிலிருந்து தரம் 11 வரையான மாணவர்கள் கணினிக்கூடத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆசிரியர் திருமதி.ஜெ.குமாரகிருஸ்ணன் இதற்குப் பொறுப்பாக செயற்பட்டு வருகின்றார்.

## நூல்நிலையம்

